**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC.No. 63/2022** **Date: 08/08/2024**

**PW 2 (பாலசுந்தர் )**

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னை காவல் அதிகாரி விசாரிக்கவில்லை. திருச்சி பால்வள கூட்டுறவு தணிக்கை இயக்குநர், திருச்சிராப்பள்ளி அவர்களின் விரைவு குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேன். 81 பிரிவின் கீழ் விசாரணை செய்ய விஜயா என்பவரை நான்தான் விசாரணை அலுவலராக நியமனம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு முறைகேடுகள் குறித்து விசாரணை அதிகாரியை நியமனம் செய்ய யாரிடமிருந்து தகவல் பெறப்பட்டது என்றால் ஆணையர் பால் உற்பத்தி மேம்பாட்டு துறை ஆணையம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்டது. அதன் பின்பு தான் பிரிவு 81 ன் கீழ் விசாரணை அதிகாரியை நியமித்தேன். 16/12/2015 அன்று விசாரணை அதிகாரியை நியமித்தேன். அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆவணங்களில் நீட்டிப்பு தேதி கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2 ல் தேதி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலநீட்டிப்பு கடிதங்கள் விசாரணை அதிகாரியால் என்னிடம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை அறிக்கையை 14/09/2016 ல் முடித்து 21/09/2016 அன்று

என்னுடைய அலுவலகத்தில் சமர்பித்தார் என்று எனக்கு எப்படி விசாரணை முடிவுற்ற தேதி தெரியும் என்றால் அவருடைய விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். விசாரணை அறிக்கையை நான் பெற்றபிறகு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றும் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக அ.சா. ஆ.3 மற்றும் அ.சா.ஆ..4 காலநீட்டிப்பு கடிதங்கள் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. விசாரணை அலுவலர் விசாரணையை முடித்ததாகவும், அறிக்கையை சமர்பித்ததாகவும் சொல்லப்பட்டுள்ள தேதிகள் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. விசாரணையில் குறைபாடுகள் ஏற்பட்டதன் காரணமாகத்தான் 2019 ஆம் ஆண்டு காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான் 31/10/2016 ல் பணிஓய்வு பெற்றுவிட்டேன். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. 1 ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. முறையாக விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பால்வளத்துறை துணைப் பதிவாளராக பணியில் சேர்ந்தேன். 2012-2013, 2013-2014 ஆகிய காலகட்டங்களில் முறைகேடுகள் நடந்தது. என்னுடைய கட்டுப்பாட்டில் 177 பால் உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் இருந்தன. பொதுவாக ஒரு தனி அலுவலருக்கு 25 சங்கங்கள் ஒதுக்கப்படும். 2, 3 வது எதிரிகள் தனி அலுவலர் பொறுப்பு கூடுதலாக வகித்தார்கள் என்றால் சரிதான். 2,3

எதிரிகள் முதுநிலை ஆய்வாளர் பணியை செய்தார்கள் என்றால் சரிதான். நான் பணியாற்றியபோது 5 முதுநிலை ஆய்வாளர்கள் ் இருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்யவேண்டுமென்ற விதிமுறை உள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு ஆண்டும் தணிக்கை செய்து அறிக்கை தாக்கல் செய்யவேண்டும் என்றால் சரிதான். 2012-2013, ஆண்டுகளுக்கான தணிக்கை எப்போது செய்யப்பட்டது என்றால் 2014 ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது. 2013-2014, ஆண்டுகளுக்கான தணிக்கை எப்போது செய்யப்பட்டது என்றால் 2015 ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்டது. 01.10. 2015 ஆம் தேதி தணிக்கை ஆணையர் அலுவலகத்திடமிருந்து அறிக்கை என்னிடம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில் நிதிஇழப்பு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் துணைப்பதிவாளராக பொறுப்பேற்ற பிறகு பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சங்கங்களிலும் பரிசோதனை செய்தேன். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சங்கத்தை நான் பார்வையிட்டபோது முறைகேடு நடந்துள்ளதை நான் கண்டுபிடித்தேன். நான் தணிக்கை அறிக்கை வருவதற்கு முன்பே முறைகேடுகள் நடந்துள்ளதை நான் கண்டுபிடித்தேன். முறைகேடு குறித்து நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நான் வாய்மொழியாக எச்செரித்து விட்டு வந்துவிட்டேன். முறைகேடுகள் நடந்த காலகட்டத்தில் நான் அதிகாரியாக பொறுப்பில் இல்லை என்றால் சரிதான். தணிக்கை அறிக்கை வந்தபிறகு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் பிரிவு 81 ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட்டேன். விசாரணை அதிகாரியாக முதுநிலை

ஆய்வாளர் விஜயா என்பவரை நியமித்தேன். தனி அலுவலர் பதவி முதுநிலை ஆய்வாளர் பதவியை விட உயர்ந்தது என்றால் இல்லை. முதுநிலை ஆய்வாளர் விஜயா 2,3 எதிரிகள் வகித்துவந்த பதவிக்கு ஜூனியர் என்றால் சரியல்ல. உள் விசாரணை அதிகாரியாக ஒரு கடைநிலை ஊழியரான அலுவலக உதவியாளரை நியமிக்கலாம் என்றால் சரியல்ல. எதிரிகளை விசாரணை செய்ய முறையான தகுதியான அதிகாரிகளை நான் நியமிக்கவில்லை என்றால் சரியல்ல. 81 விசாரணையை 6 மாதத்திற்குள் முடிக்கவேண்டும் என்றால் சரியல்ல. 9 மாத காலம் அவகாசம் உள்ளது. எதிரிகள் முறைகேடு செய்ததற்கு நானும் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் என் பணியில் கவனக்குறைவாக இருந்தேன் என்றால் சரியல்ல. 2,3 எதிரிகளுக்கு வழங்கப்பட்ட முதுநிலை ஆய்வாளர் பணி என்பது கூடுதல் சுமை என்றால் தவறு. விசாரணைக்கு காலநீட்டிப்பு வழங்கப்படவில்லை என்றாலும், நீட்டிப்பு தேதிகள் உருவாக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over/interpreted to the witness
in the presence of the accused/accused/
pleader and admitted by the witness to
be correct.

sd/-
Judicial Magistrate No.I,
Perambalur.

UNPUBLR